**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 402/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : முத்து |
| Father's Name/ Husband's Name | : மண்ணாங்கட்டி |
| Village & Taluk | : பனமலை |
| Calling | : நில அளவியர் (ஓய்வு) |
| Age | : 66 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025**

1 முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 செந்தமிழ்செல்வி எனது மகள் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி எனது மருமகன், 2 முதல் 7 எதிரிகள் 1ம் எதிரியின் தாய், அக்கா, சித்தி, அண்ணி, அண்ணன் முறை ஆவார்கள். கடந்த 21.06.2010 பாண்டிச்சேரி கீர்த்தி மகாலில் எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் முறைப்படி திருமணம் நடந்தது. திருமணத்திற்கு ரூ.1,00,000/–ற்கு சீர்வரிசை சாமான்கள் ரூ.70,000/– மதிப்புள்ள இரு சக்கர வாகனம் மற்றும் 30 பவுன் தங்க நகைகள் ஆகியவற்றை சீதனமாக கொடுத்தேன். எனது பெண்ணை திருமணம் செய்ய வேண்டும் என எதிரி குடும்பத்தினர் கேட்டபோது 1ம் எதிரி டிராவல்ஸ் மற்றும் ஸ்டுடியோ வைத்திருப்பதாகவும் கூறினார். அதன் பேரில் தான் நான் என் மகளை 1ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன்.

2. கடந்த 12.11.2011 அன்று எனது மகளுக்கு திருமணத்தின் பலனாக பாண்டிச்சேரி ராஜுவ் காந்தி மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. 1ம் எதிரி டிராவல்ஸ் மற்றும் ஸ்டுடியோ வைத்திருக்கவில்லை என்ற விவரம் திருமணத்திற்கு பின்னிட்டு தான் தெரிய வந்தது. மேற்படி விவரத்தை எனது மகள் 1ம் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினரிடம் கேட்டபோது ஸ்டுடியோ

வைத்து தருமாறும், கேமரா மற்றும் இதர பொருட்களை வாங்கி தருமாறும் எனது மகளிடம் கேட்க ஆரம்பித்துவிட்டனர். அதன் பேரில் கேமரா வாங்குவதற்காக ரூ.50,000/−1ம் எதிரியிடம் கொடுத்தேன்.

3. அதன் பின்னிட்டும் எனது மகளிடம் எதிரிகள் ரூ.1,00,000/− மற்றும் மீண்டும் கேமரா வாங்குவதற்காக பணம் தருமாறு கேட்டதாக என் மகள் என்னிடம் கூறினார். எதிரிகள் குடும்பத்திற்கு சொந்தமான இரண்டு வீடுகள் இருந்தும் எனது மகளை வாடகை வீட்டில் குடித்தனம் வைத்தனர். மேற்படி வீட்டிற்கான வாடகை மற்றும் மல்லிகை சாமான் வாங்குவதற்கான பணம் ஆகிய அனைத்தையும் வாரம் தோறும் நான் தான் கொடுத்துக்கொண்டிருந்தேன். ஒரு மாதம் வாடகை பணம் கொடுக்க இயலவில்லை என்பதால் எனது மோதிரத்தை 1ம் எதிரியிடம் கொடுத்து அதனை விற்று வாடகை கொடுக்குமாறு கொடுத்தேன்.

4. அதன் பின்னிட்டு நான் ஓய்வு பெறும் தருவாயில் பணம் வாங்கி வருமாறு எனது மகளை எதிரிகள் மிரட்டியுள்ளனர். மேலும், பணம் வாங்கி வரவில்லை என்றால் எனது மகளை அடித்து சாகடித்து விடுவேன் எனவும் , குழந்தையை கடலில் எறிந்துவிடுவேன் எனவும் மிரட்டியுள்ளனர். எனது மகள் மேற்படி குழந்தையை கருவில் சுமந்தபோது எதிரிகள் எனது மகளுக்கு உணவு அளிக்காமல் அவரை பட்டினி போட்டிருந்தனர். அந்த விவரம் தெரிந்து நான் சென்று எனது மகளுக்கு தேவையான மளிகை பொருட்களை வாங்கி கொடுத்துவிட்டு வந்தேன். அதன் பின்னிட்டு எதிரிகளின் மதொல்லை தாங்க முடியாமலும் எதிரிகளுக்கு பயந்தும் எனது மகளை மேற்படி வீட்டில் இருந்து காலி செய்து விழுப்புரத்தில் குடியமர்த்தினேன்.

5. முதலியார் பேட்டையில் எனது மகள் Housing board ல் தனியாக வாடகை வீட்டில் இருந்தபோது அவரது மாமியார், நாத்தனார், ரமணி மற்றும் அமுதா ஆகியோர்கள் வீடு தேடி வந்து எனது மகளை அடித்து துன்புறுத்தியுள்ளர். இந்த விவரம் எனக்கு பின்பு தான் தெரிய வந்தது. எனவே நான் எனது மகளின் பாதுகாப்பிற்காக எனது மகன் மதியழகனை மேற்படி வீட்டில் தங்க

வைத்திருந்தேன். அவர் வேலைக்கு செல்லும் சமயத்தில் எதிரியின் குடும்பத்தினர் எனது மகளிடம் தொல்லை செய்துள்ளனர். எனவே தான் எனது மகளை விழுப்புரத்திற்கு அழைத்து வந்து குடியமர்த்தினேன்.

6. 02.11.2014 அன்று எனது மற்றொரு மகளுக்கு திருமணம் செய்து வைத்தேன். அந்த திருமணத்திற்காக எதிரிகளை சம்பந்தி என்ற முறையில் அழைத்தபோது அவர்கள் வந்து எனது மகளிடம் பணம் வாங்கி வருமாறும் இல்லை என்றால் வீட்டிற்கு வரவேண்டாம் என்றும் மிரட்டியுள்ளனர். எதிரிகள் எனது மகளை கொடுமைபடுத்தியதற்காகவும், மேலும், சீதனமாக கொடுத்த பொருட்களை மீண்டும் பெற்று தரவேண்டியும் மற்றும் ஜீவனாம்சம் கேட்டும் எனது மகள் இந்த புகாரை கொடுத்துள்ளார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.